# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2022.08.31 |


## ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2022 ஓகத்தில் 64.3 சதவீதத்தைப் பதிவுசெய்தது

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொநுவிசு, 2013=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2022 யூலையின் 60.8 சதவீதத்திலிருந்து 2022 ஓகத்தில் 64.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கத்தில் இவ்வதிகரிப்பானது உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டினதும் மாதாந்த அதிகரிப்புக்களால் பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. அதற்கமைய, உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2022 யூலையின் 90.9 சதவீதத்திலிருந்து 2022 ஓகத்தில் 93.7 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2022 யூலையின் 46.5 சதவீதத்திலிருந்து 2022 ஓகத்தில் 50.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம், 2022 ஓகத்தில் 2.45 சதவீதமாகப் பதிவாகியது. இதற்கு, முறையே 0.83 சதவீதமாகவும் 1.62 சதவீதமாகவும் காணப்பட்ட உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டினதும் பொருட்களில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்தது. அதற்கமைய, உணவு வகையினுள் உடன் மீன், பழங்கள், பாண், பிஸ்கட், முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பவற்றின் விலைகளில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும், அரிசி மற்றும் பருப்பு விலைகள் மாதகாலப்பகுதியில் குறைவடைந்தன. மேலும், உணவல்லா வகையினுள் வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் (மின்சாரக் கட்டணம் மற்றும் பராமரித்தல்/மீள்கட்டுமானம்), போக்குவரத்து (பாடசாலை செல்வதற்கான போக்குவரத்துக் கட்டணம் மற்றும் விமானக் கட்டணம்) ஆடை மற்றும் காலணி அத்துடன் நானாவிதப் பொருட்கள் மற்றும் சேவைகள் துணைவகைகளின் விலைகளில் மாதகாலப்பகுதியில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

அதேவேளை, ஆண்டுச் சராசரி பணவீக்கம் 2022 யூலையின் 23.1 சதவீதத்திலிருந்து 2022 ஓகத்தில் 28.0 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம், (ஆண்டிற்கு ஆண்டு) 2022 யூலையின் 44.3 சதவீதத்திலிருந்து 2022 ஓகத்தில் 46.6 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2022 யூலையின் 16.7 சதவீதத்திலிருந்து 2022 ஓகத்தில் 20.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.

| பணவீக்கம் | 2022 யூலை | 2022 ஓகத் |
|---|---|---|
| **முதன்மை** | | |
| சுட்டெண் பெறுமதி | 230.1 | 235.8 |
| மாதாந்த மாற்றம் (%) | 4.5 | 2.5 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 60.8 | 64.3 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 23.1 | 28.0 |
| **மையம்** | | |
| சுட்டெண் பெறுமதி | 208.0 | 212.0 |
| மாதாந்த மாற்றம் (%) | 3.9 | 1.9 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 44.3 | 46.6 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 16.7 | 20.3 |







[1] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (2013=100) கொழும்பு மாவட்டத்தின் நகர் பிரதேசங்களிலுள்ள வீட்டலகுகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளிலுள்ள சராசரி மாற்றங்களை குறித்துக்காட்டுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

**துணைவகைப்படுத்தல் ரீதியான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு மாற்றம்)**




**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள் தளம்: (2013=100)**

| காலம் | | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | மாதம் | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) |
| 2021 | ஓகத்து | 143.5 | 144.6 | 0.3 | 0.3 | 6.0 | 4.1 | 4.3 | 3.2 |
| | செத்தெம்பர் | 144.1 | 146.0 | 0.4 | 1.0 | 5.7 | 5.0 | 4.5 | 3.3 |
| | ஒத்தோபர் | 146.9 | 147.9 | 1.9 | 1.3 | 7.6 | 6.3 | 4.8 | 3.6 |
| | நவெம்பர் | 150.7 | 149.4 | 2.6 | 1.0 | 9.9 | 7.0 | 5.3 | 4.0 |
| | திசெம்பர் | 154.7 | 151.3 | 2.7 | 1.3 | 12.1 | 8.3 | 6.0 | 4.4 |
| 2022 | சனவரி | 158.4 | 154.1 | 2.4 | 1.9 | 14.2 | 9.9 | 6.9 | 5.0 |
| | பெப்புருவரி | 160.1 | 155.7 | 1.1 | 1.0 | 15.1 | 10.9 | 7.9 | 5.7 |
| | மாச்சு | 164.9 | 159.4 | 3.0 | 2.4 | 18.7 | 13.0 | 9.1 | 6.5 |
| | ஏப்பிறல் | 180.2 | 172.4 | 9.3 | 8.2 | 29.8 | 22.0 | 11.3 | 8.1 |
| | மே | 195.2 | 182.9 | 8.3 | 6.1 | 39.1 | 28.4 | 14.2 | 10.2 |
| | யூன் | 220.2 | 200.2 | 12.8 | 9.5 | 54.6 | 39.9 | 18.4 | 13.3 |
| | யூலை | 230.1 | 208.0 | 4.5 | 3.9 | 60.8 | 44.3 | 23.1 | 18.7 |
| | ஓகத்து | 235.8 | 212.0 | 2.5 | 1.9 | 64.3 | 46.6 | 28.0 | 20.3 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்